**தொடர்பூட்டல் திணைக்களம்**
30,சனாதிபதிமாவத்தை,கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்:dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்:www.cbsl.gov.lk


# பத்திரிகைவெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2020.08.14 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 யூன்

### முக்கிய பண்புகள்

| | 2020 யூன் | 2020 சன-யூன் |
|---|---|---|
| வர்த்தகப் பற்றாக்குறை | ஐ.அ.டொ. 161 மில்.<br>2019 யூன்: ஐ.அ.டொ 316 மில் | ஐ.அ.டொ. 3,262 மில்<br>2019 சன-யூன் ஐ.அ.டொ. 3,597 மில். |
| வணிகப்பொருள் ஏற்றுமதி | ஐ.அ.டொ. 894 மில்<br>2019 யூன்: ஐ.அ.டொ 1,084 மில்<br>-17.5% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொ. 4,413 மில்<br>2019 சன-யூன்: ஐ.அ.டொ. 5,999 மில்.<br>-26.4% ஆண்டிற்கு ஆண்டு |
| வணிகப்பொருள் இறக்குமதி | ஐ.அ.டொ. 1,055 மில்<br>2019 யூன்: ஐ.அ.டொ 1,400 மில்<br>-24.6% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொ. 7,675 மில்<br>2019 சன-யூன்: ஐ.அ.டொ. 9,596 மில்.<br>-20.0% ஆண்டிற்கு ஆண்டு |

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**
2020 யூன்: -
2020 சன-யூன்: ஐ.அ.டொ. 956 மில்
(-49.7% ஆண்டிற்கு ஆண்டு)

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**
2020 யூன்: ஐ.அ.டொ. 572 மில்
(-6.7% ஆண்டிற்கு ஆண்டு)
2020 சன-யூன்: ஐ.அ.டொ. 2,980 மில்
(-8.9% ஆண்டிற்கு ஆண்டு)

| கொபப (இரண்டாந்தரச் சந்தை – தேறிய) | அரச பிணையங்கள் (தேறிய) | மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | செலாவணி வீதம் (ஐ.அ.டொ. ஒன்றுக்கு ரூ.) |
|---|---|---|---|
| யூன் 2020: ஐ.அ.டொ -46 மில்<br>சன-யூன் 2020: ஐ.அ.டொ -112 மில் | யூன் 2020: ஐ.அ.டொ. -38 மில்<br>சன-யூன்: ஐ.அ.டொ. -492 மில் | யூன் இறுதியில் 2020– ஐ.அ.டொ.6.7 பில்<br>(4.5 மாத இறக்குமதிகள்) | 2019 திசெ இறுதியில் – 181.6340<br>2020 யூன் இறுதியில் – 186.2292 |













இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## பொதுநோக்கு

உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை படிப்படியாக வழமைக்குத் திரும்பியமையின் காரணமாக 2020 யூனில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை மேலும் உறுதியடைந்தது. வணிக ஏற்றுமதிகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க கூடுதலானளவிற்கு மீண்டும் உத்வேகமடைந்தமை அத்தியாவசியமல்லா இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளின் காரணமாக வணிகப்பொருள் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தமை, என்பனவற்றின் காரணமாக 2020 யூனில் வர்த்தகப் பற்றாக்குறை (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தது. கொவிட்-19 தொற்று பரவியமைக்குப் பின்னர் முதற்றடவையாக யூனில் தொழிலாளர் பணவனுப்பல்கள் வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இம்மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆகிய இரண்டும் சில வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறைப்பின் உதவியுடன் 2020 யூன் மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா சிறிதளவு அதிகரிப்பினை பதிவுசெய்தது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | யூன் 2019 ஐ.அ.டொ மில் | யூன் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-யூன் 2019 ஐ.அ.டொ மில் | சன-யூன் 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,084 | 894 | -17.5 | 5,999 | 4,413 | -26.4 |
| இறக்குமதிகள் | 1,400 | 1,055 | -24.6 | 9,596 | 7,675 | -20.0 |
| வர்த்தக மீதி (தேறிய) | -316 | -161 | | -3,597 | -3,262 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 119 (ஆ) | - | -100.0 | 1,901(ஆ) | 956 (இ) | -49.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 537 | 572 | 6.7 | 3,270 | 2,980 | -8.9 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய)(ஈ) | 10 | -46 | | -10 | -111 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 2,176 | 116 | | 5,555 | 1,196 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 49 | 3 | | 376 | 90 | |
| நீண்ட காலக் கடன்கள் | 127 | 113 | | 779 | 1,106 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 2,000 | - | | 4,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | | | | 255 | 192 | |
| திரண்ட நிலுவை | | | | 1,827 | -760 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கானசராசரிதங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கைசுற்றுலாஅபிவிருத்திஅதிகாரசபையின் 2020அளவீட்டுமதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

(உ) இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தகமாற்று விகிதம்

- **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 யூனின் ஐ.அ.டொலா் 316 மில்லியனிலிருந்து 2020 யூனில் ஐ.அ.டொலா் 161 மில்லியனுக்கு குறுக்கமடைந்து 2009 ஓகத்திற்குப் பின்னா் மிகக் குறைந்த மாதாந்த பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. அத்துடன், 2020இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தகப் பற்றாக்குறை, 2019இன் தொடா்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலா் 3,597 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலா் 3,262 மில்லியனுக்கு ஐ.அ.டொலா் 335 மில்லியனால் குறுக்கமடைந்தது. 2020இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப்பங்களித்த முக்கியகாரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதிவிலைகளின் விகிதம் 2020 யூனில் 7.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க ஏற்றுதிகளின் விலைகள் விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2020 சனவரி –யூனில் வர்த்தகப் பற்றாக்குறையின் வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**




**மூலங்கள்:**இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019– 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- **வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2020 மேயில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 587 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் கடுமையாக உயர்வடைந்து ஐ.அ.டொலர் 894 மில்லியனைப் பதிவுசெய்தது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் பழைய நிலைமைக்குத் திரும்பியமை அதேபோன்று உள்நாட்டு மற்றும் உலகளாவிய வழங்கல் மற்றும் கேள்விச் சங்கிலிகள் ஆகிய இரண்டும் ஓரளவிற்கு மீட்சியடைந்தமை என்பன இம்மேம்பாட்டிற்கு முக்கியமாகப் பங்களித்த காரணிகளாகும். புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020 மேயில் இருந்து 2020 யூனில் அதிகரிப்பதற்கு வழிவகுத்ததுடன் அதனை அடுத்து இறப்பர் உற்பத்திகள் உணவு, குடிபானம், புகையிலை, கடல் உணவு மற்றும் வாசனைத் திரவியங்கள் காணப்பட்டன.

- எனினும், 2019 யூனுடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 17.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளே முக்கியமாக வழிவகுத்தன. தயாரிக்கப்பட்ட பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட முகக்கவசங்கள் மற்றும் பாதுகாப்பு உடைகள் போன்ற தனியாள் பாதுகாப்புச் சாதனங்களிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்பு காணப்பட்டமைக்கிடையிலும் 2020 யூனில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் இவ்வீழ்ச்சிக்கு பெருமளவிற்குப் பங்களித்தன. போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் விலங்குத்தீன் என்பனவற்றினை உள்ளடக்கிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெரும்பாலான துணை வகைகளிலிருந்தான வருவாய்கள் இம்மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அறுவைசிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகளின் ஏற்றுமதிகள் அதிகரித்த போதும் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு ரயரின் ஏற்றுமதிகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும்,உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (திரவ தேங்காய்ப் பால், தேங்காய் களி மற்றும் தயாரிக்கப்பட்ட புகையிலை), பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் (பிளாத்திக்கிலான ஆடைப்பொருட்கள்) மற்றும் இரசாயன உற்பத்திகள் (செயற்படு கரியம்) என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் 2020 யூனில் அதிகரித்தன.

- 2020 யூனில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 மே மாதத்திற்குப் பின்னர் முதற்றடவையாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இவ்வதிகரிப்பிற்கு தயாரிக்கப்படாத புகையிலை தவிர்ந்த, வேளாண்மை ஏற்றுமதிகளின் அனைத்துத் துணை வகைகளும் பங்களித்தன. 2020 யூனில் தேயிலையிலிருந்தான வருவாய்கள் 10 மாதங்களின் பின் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தமைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகளில் சிறிதளவு வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதும் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலைகள் உயர்வடைந்தமையே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. உயர்ந்த வருவாய்கள் சிறுவேளாண்மை உற்பத்திகளில் பதிவுசெய்யப்பட்டதுடன் பாக்கு, பழவர்க்கங்கள், வெற்றிலை என்பனவற்றில் உயர்ந்த ஏற்றுமதிகள் இதற்கு வகைகூறின. கறுவா மற்றும்மிளகு என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் காரணமாக வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் அதிகரித்த வேளையில் தேங்காயிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு உள்ளீட்டு உற்பத்திகளுக்கான உயர்ந்த சராசரி விலைகளும் உள்ளீடு அல்லாத உற்பத்திகளின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளும் காரணங்களாக அமைந்தன.

- 2020 யூனில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு இரும்புத் தாதுக்கள், கழிவு இரும்புகள் மற்றும் சாம்பல் கட்டிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான தாழ்ந்த வருவாய்களே காரணங்களாக அமைந்தன.

- 2020 யூனில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 19.5 சதவீதத்தினால் தேய்வடைந்து 2019 யூனுடன் ஒப்பிடுகையில் குறைந்த ஏற்றுமதி விலைகளினால் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தமையினை எடுத்துக்காட்டின. எனினும், மாதத்திற்கு மாத அடிப்படையில் 2020 மேயுடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 61.7 சதவீதமாக கணிசமாக மேம்பட்ட வேளையில் அலகுப்பெறுமதிச் சுட்டெண்ணின் தேய்வு ஒப்பீட்டு ரீதியில் குறைவாக 5.7 சதவீதத்தில் காணப்பட்டது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: மாதாந்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | யூன் 2019 (ஐ.அ.டொ மில்) | யூன் 2020 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2019 (ஐ.அ.டொ மில்) | சன-யூன் 2020 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **875.4** | **661.3** | **-24.5** | **4,728.6** | **3,357.1** | **-29.0** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 31.0 | 41.7 | 34.5 | 233.4 | 197.8 | -15.2 |
| விலங்குத்தீன் | 19.4 | 11.3 | -41.8 | 70.7 | 49.2 | -30.4 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 505.3 | 403.7 | -20.1 | 2,761.4 | 1,943.9 | -29.6 |
| இதில் ஆடைகள் | 472.3 | 323.0 | -31.6 | 2,570.8 | 1,734.2 | -32.5 |
| புடவைகள் | 23.4 | 20.8 | -10.8 | 138.0 | 105.9 | -23.2 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.7 | 59.8 | 516.8 | 52.6 | 103.8 | 97.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 79.1 | 66.0 | -16.6 | 442.1 | 335.7 | -24.1 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 19.9 | 11.2 | -43.8 | 151.0 | 72.8 | -51.8 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 34.4 | 30.2 | -12.1 | 206.5 | 146.5 | -29.1 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 67.6 | 7.7 | -88.6 | 107.2 | 30.9 | -71.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 35.6 | 16.7 | -53.0 | 241.9 | 219.5 | -9.3 |
| இரசாயன உற்பத்திகள் | 15.5 | 16.0 | 3.3 | 87.9 | 75.3 | -14.3 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.8 | 8.0 | -25.3 | 70.7 | 44.4 | -37.2 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 1.9 | 1.9 | 0.1 | 23.3 | 15.1 | -35.4 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 8.9 | 5.9 | -34.4 | 58.1 | 26.1 | -55.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.0 | 6.9 | 14.9 | 36.3 | 26.7 | -26.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.8 | 9.6 | -30.3 | 90.7 | 55.5 | -38.8 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.8 | 1.4 | -49.7 | 14.1 | 9.1 | -35.7 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 23.5 | 23.2 | -1.4 | 133.1 | 108.7 | -18.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **204.5** | **229.1** | **12.0** | **1,245.1** | **1,039.0** | **-16.6** |
| தேயிலை | 113.2 | 114.9 | 1.6 | 684.9 | 571.7 | -16.5 |
| இறப்பர் | 1.7 | 2.9 | 68.4 | 15.0 | 13.5 | -10.1 |
| தெங்கு | 29.3 | 34.2 | 16.9 | 173.2 | 146.8 | -15.2 |
| வாசனைத்திரவியங்கள் | 24.5 | 31.5 | 28.6 | 143.6 | 113.8 | -20.7 |
| காய்கறிகள் | 2.3 | 3.9 | 68.0 | 16.0 | 13.8 | -13.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.5 | 1.3 | -62.8 | 16.6 | 9.5 | -42.5 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 8.6 | 16.0 | 87.1 | 52.3 | 70.7 | 35.3 |
| கடலுணவு | 21.4 | 24.3 | 13.7 | 143.6 | 99.1 | -31.0 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.8** | **1.6** | **-42.7** | **16.7** | **9.7** | **-41.8** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.2** | **2.1** | **69.9** | **8.8** | **7.0** | **-20.7** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,084.0** | **894.1** | **-17.5** | **5,999.2** | **4,412.8** | **-26.4** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2019 திசெம்பரிலிருந்து 2020 மே வரை **வணிகப்பொருள் இறக்குமதிகள்** மீதான செலவினத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிடைந்து செல்லும் போக்கு 2020 யூனில் மாற்றமடைந்ததெனினும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 24.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2020 யூனில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,055 மில்லியனாக விளங்கியது. 2020 யூனில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அனைத்து முக்கிய இறக்குமதித் துறைகள் மீதுமான செலவினம் வீழ்ச்சியடைந்ததுடன் இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி கூடுதலானதாகக் காணப்பட்டது. இப்பரந்த அடிப்படையிலான வீழ்ச்சிக்கு கொவிட்-19 தொற்றினால் உருவாக்கப்பட்ட மோசமான தாக்கத்தினைத் தணிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2020 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட வழிமுறைகளும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் கடுமையாக வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

- இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் இறக்குமதிச் செலவினத்தில் பெரும்பாலான வீழ்ச்சிக்குப் பங்களித்தது. 2020 யூனில் எரிபொருள் இறக்குமதி 2019 யூனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட மற்றும் மசகெண்ணெயின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. செலவினத்தில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு இறக்குமதி செய்யப்பட்ட அளவுகளில் ஏற்பட்ட குறைப்பும் பன்னாட்டுச் சந்தையில் நிலவிய குறைந்த எரிபொருள் விலைகளும் காரணங்களாக அமைந்தன. 2020 யூனில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை ஓராண்டிற்கு முன்னரான ஐ.அ.டொலர் 67.29 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 38.35 இற்கு வீழ்ச்சியடைந்தது. புடவை மற்றும் புடவைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 2020 யூனில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு துணி மற்றும் நூல்களின் தாழ்ந்த இறக்குமதிகளே வழிவகுத்தன. எனினும், வளமாக்கி (முக்கியமாக யூரியா), கனிப்பொருள் உற்பத்திகள் (முக்கியமாக சிமெந்து, சூளைக்கற்கள்), தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் (முக்கியமாக விலங்குத்தீன்) என்பன மீதான இறக்குமதிச் செலவினம் 2019 யூனுடன் ஒப்பிடுகையில் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன.

- 2020 யூனில் முதலீட்டுப்பொருட்களின் அனைத்துத் துணை வகைகளும் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய,பொறிகள் மற்றும் கருவிகள் (முக்கியமாக மருத்துவ மற்றும் ஆய்வுகூடச் சாதனம்), கட்டடப்பொருட்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்குப்பொருட்கள்), போக்குவரத்துச் சாதனங்கள் (முக்கியமாக தாங்கிகள் மற்றும் நீர்த்தாங்கிகள் போன்ற வர்த்தக ஊர்திகள்) என்பன மீதான செலவினம் 2019 யூனுடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் வீழ்ச்சியடைந்தன. எனினும்,ஆய்விற்குரிய காலப்பகுதியில் பொறிகள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் சிமெந்து என்பன மீதான செலவினம் அதிகரித்தது.

- உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் அதிகரித்த போதும் நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 80.9 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் வீட்டு உபயோகப்பொருட்களின் இறக்குமதிகளின் வீழ்ச்சிக்கு, 2020 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட இறக்குமதிகள் மீதான கட்டுப்பாட்டு வழிமுறைகளின் முக்கிய காரணமாக இம்மாத காலப்பகுதியில் குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிப்பெட்டிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. எனினும், 2020 யூனில் மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள், தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் (முக்கியமாக செல்லிடத் தொலைபேசிகள்) இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தது. அதேவேளை, உணவு மற்றும் குடிபானம் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு கடலுணவு (முக்கியமாக கருவாடு), பாற்பண்ணை உற்பத்திகள் (முக்கியமாக பால்மா), காய்கறிகள் (முக்கியமாக பருப்பு வகை), கொழுப்பு மற்றும் எண்ணெய் (முக்கியமாக தேங்காயெண்ணெய்) மற்றும் வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய் மற்றும் கொத்தமல்லி) என்பனவற்றின் இறக்குமதிகளே காரணமாக அமைந்தன.

- 2020 யூனில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் முறையே 13.2 சதவீதத்தினாலும் 13.1 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2019 யூனுடன்

ஒப்பிடுகையில் குறைந்த அளவுகள் மற்றும் குறைந்த விலைகள் இரண்டும் காரணங்களாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: மாதாந்த இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | யூன் 2019 (ஐ.அ.டொ மில்) | யூன் 2020 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) | சன-யூன் 2019 (ஐ.அ.டொ மில்) | சன-யூன் 2020 (ஐ.அ.டொ மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **258.1** | **249.1** | **-3.5** | **1,811.0** | **1,782.1** | **-1.6** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 97.7 | 101.9 | 4.4 | 689.9 | 787.3 | 14.1 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.1 | 1.0 | -51.9 | 16.3 | 16.8 | 2.5 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 17.5 | 21.0 | 20.3 | 151.6 | 181.1 | 19.4 |
| காய்கறிகள் | 23.3 | 26.5 | 13.7 | 141.3 | 202.3 | 43.2 |
| கடலுணவு | 15.1 | 22.6 | 50.0 | 107.3 | 107.5 | 0.2 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 19.3 | 12.9 | -33.0 | 104.3 | 116.4 | 11.5 |
| வாசனைத்திரவியங்கள் | 5.9 | 7.9 | 33.4 | 50.1 | 67.7 | 35.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 14.5 | 10.0 | -31.1 | 118.9 | 95.6 | -19.6 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 160.5 | 147.1 | -8.3 | 1,121.1 | 994.8 | -11.3 |
| தனியாள் ஊர்திகள் | 48.1 | 9.2 | -80.9 | 324.2 | 273.4 | -15.7 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 38.4 | 60.8 | 58.5 | 249.2 | 274.7 | 10.2 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 12.2 | 6.3 | -48.8 | 97.6 | 83.0 | -14.9 |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப்பொருட்கள் | 18.3 | 17.5 | -4.7 | 134.2 | 111.0 | -17.3 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 14.3 | 29.4 | 105.7 | 115.1 | 101.4 | -12.0 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் | 12.2 | 13.3 | 8.7 | 75.3 | 70.5 | -6.4 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 16.9 | 10.7 | -36.4 | 125.6 | 80.9 | -35.6 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **842.6** | **564.8** | **-33.0** | **5,546.4** | **4,166.8** | **-24.9** |
| எரிபொருள் | 284.5 | 110.4 | -61.2 | 2,001.0 | 1,243.4 | -37.9 |
| இதில் மசகெண்ணெய் | 92.5 | 26.8 | -71.0 | 491.3 | 251.4 | -48.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 192.0 | 83.6 | -56.4 | 1,384.5 | 865.6 | -37.5 |
| நிலக்கரி | 0.0 | 0.0 | 55.7 | 125.2 | 126.4 | 1.0 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 6.9 | 6.9 | 0.7 | 88.1 | 39.2 | -55.5 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 226.6 | 175.7 | -22.5 | 1,394.8 | 1,065.6 | -23.6 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 31.6 | 26.0 | -17.8 | 211.3 | 175.2 | -17.1 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 13.8 | 15.8 | 14.7 | 94.4 | 101.8 | 7.8 |
| கோதுமை மற்றும் சோளம் | 32.7 | 27.8 | -15.0 | 143.4 | 156.5 | 9.1 |
| அடிப்படை உலோகங்கள் | 60.8 | 13.6 | -77.7 | 277.5 | 171.2 | -38.3 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 45.5 | 28.9 | -36.4 | 289.9 | 228.3 | -21.2 |
| இரசாயன உற்பத்திகள் | 61.4 | 62.9 | 2.5 | 411.5 | 378.9 | -7.9 |
| வளமாக்கி | 8.2 | 22.2 | 171.8 | 93.4 | 107.0 | 14.6 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 16.3 | 13.7 | -16.0 | 108.8 | 110.2 | 1.3 |
| கனிம உற்பத்திகள் | 9.7 | 18.4 | 88.6 | 108.4 | 78.5 | (27.6) |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 44.5 | 42.4 | -4.8 | 323.9 | 310.9 | -4.0 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **299.0** | **240.9** | **-19.4** | **2,235.6** | **1,715.2** | **-23.3** |
| பொறி மற்றும் சாதனம் | 176.8 | 146.4 | -17.2 | 1,232.4 | 990.0 | -19.7 |
| கட்டடப்பொருட்கள் | 98.6 | 77.9 | -21.0 | 725.5 | 495.2 | -31.7 |
| போக்குவரத்துச் சாதனம் | 23.3 | 16.2 | -30.3 | 274.5 | 228.5 | -16.8 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.3 | -2.9 | 3.2 | 1.5 | -53.9 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.1** | **0.7** | **347.6** | **3.0** | **10.5** | **252.3** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,399.8** | **1,055.5** | **-24.6** | **9,596.0** | **7,674.6** | **-20.0** |
| **எரிபொருள் அல்லா இறக்குமதிகள்** | **1,115.3** | **945.0** | **-15.3** | **7,595.1** | **6,431.2** | **-15.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- உலகளாவிய கொவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக 2020 யூனில் தொடர்ந்து மூன்றாவது மாதமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் எதுவும் பதிவுசெய்யப்படாததுடன் 2020இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1,008,449 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 507,311 ஆக தொடர்ந்தும் காணப்பட்டது.

- இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட **சுற்றுலாவிலிருந்தான** ஒன்றுசேர்ந்த **வருவாய்கள்** 2020 முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாக விளங்கி **2019இன்** தொடர்பான காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் 49.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினைக் காட்டியது.

- அதேவேளை, 2020 யூனில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்,**ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்,ஐ.அ.டொலர் 572 மில்லியனுக்கு, 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கு மத்திய கிழக்கில் உள்ள புலம்பெயர் தொழிலாளர்கள் பண்டிகைக்கால படிகளை பெற்றுக்கொண்டமையே காரணமாகும். 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 2,980 மில்லியனுக்கு 8.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 8: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 யூனில்,ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட **அரச பிணையங்கள்** சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 38 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்பதிவுசெய்யப்பட்டமை2020இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 492 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தது.அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 88 மில்லியனாக அமைந்து குறிப்பிடத்தக்களவிற்குதொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டன.

- 2020 யூனில் **கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின்**இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 46 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது (2020 யூனில் முதலாந்தரச் சந்தை உட்பாய்ச்சல்கள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை). ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020இன் முதல்

ஆறு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 111 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

- மேலும்,அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் கணக்கின்பேரிலான தேறிய உட்பாய்ச்சல்கள் 2020 யூனில் ஐ.அ.டொலர் 34 மில்லியனாக விளங்கியது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 யூன் இறுதியில் **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** ஐ.அ.டொலர் 6.7 பில்லியனாக விளங்கி 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 9.5 பில்லியனாக விளங்கி 6.3 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2020 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக உயர்வடையத் தொடங்கிய இலங்கை ரூபா 2020 யூன் மாத காலப்பகுதியிலும் உத்வேகமொன்றினைப் பேணியதுடன் இம்மாத காலப்பகுதியில் 0.03 சதவீதம் கொண்ட சிறிதளவு உயர்வினையும் பதிவுசெய்தது. 2020 மே தொடக்கத்தில் இருந்து ஏற்பட்ட கடுமையான உயர்வின் காரணமாக 2020 ஓகத்து 14ஆம் திகதி வரையான இவ்வாண்டுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக ரூபாவின் ஒட்டுமொத்தத் தேய்வு 0.6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஒதுக்குகளை கட்டியெழுப்பும் நோக்குடன் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தொடர்ச்சியாக தலையிட்டது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவானது யூரோ, ஸ்ரேர்லிங் பவுண், யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் 2020 ஓகத்து 14ஆம் நாள் வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இந்தியன் ரூபாவிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 ஓகத்து 14 வரை) தேய்வு(-)/ உயர்வு (+) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -0.6% |
| யூரோ | -12.7% | +2.6% | -5.6% |
| ஸ்ரேர்லிங் பவுண் | -11.4% | -2.8% | -0.02% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -2.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | -2.4% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +4.3% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி